புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • மார்ச் 27, 2025 • புரட்சி 25 • முழக்கம் 11 • விலை ரூ.3.00








# காஞ்சி சங்கராச்சாரி "பிராமண" வெறிப் பேச்சு
## நடவடிக்கை எடுக்கக் கோரி கழகம் போராட்ட அறிவிப்பு.

**பெரியார் ஏன் எதிரிகளைப் பதறவைக்கிறார்?" "வாருங்கள் வரலாறு பேசுவோம்!!"** என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் மார்ச் 15-ல் தொடங்கி மார்ச் 22- வரை தமிழ்நாடு தழுவிய பரப்புரைப் பயணங்களை நடத்தி நிறைவு விழா மாநாட்டை மயிலாடுதுறையில் மார்ச் 22.03.2025 மாலையில் நடத்தியது. **மாநாட்டில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.** அரசியல் சட்டத்திற்கு எதிராக இனவெறியைத் தூண்டி காஞ்சி சங்கராச்சாரி பேசிய பேச்சுக்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஏப்ரல் 21-இல் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த மாநாடு முடிவு செய்தது. தீர்மானத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்தார். பலத்த கரவொலி எழுப்பி, தோழர்கள் வரவேற்றனர்.

### தீர்மானத்தின் விவரம்.

கடந்த ஜனவரி 19-ஆம் தேதி பெங்களூரில் "கர்நாடக பிராமண மகாசபையில்" பேசிய காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திர சரஸ்வதி, அரசியல் சட்டத்திற்கு எதிராக இனவெறியை தூண்டிவிட்டிருக்கிறார். வேத மதத்தை காப்பாற்ற "பிராமணர்களால்" மட்டுமே முடியும் எனவே "பிராமணியத்தை" நாம் காப்பாற்றியாக வேண்டும்.

"பிராமணர்களை" அடையாளப்படுத்தும் சந்தியா வந்தனம், காயத்திரி மந்திரம், அக்னி பூஜைகளைக் கண்டிப்பாக ஒவ்வொரு வீட்டிலும் நடத்த வேண்டும். சடங்குகளைக் குடும்பத்தினரே நடத்த வேண்டும். வீட்டுச் சமையல் சாப்பிட வேண்டும். ஓட்டலில் இருந்து வரவழைத்து சாப்பிடக் கூடாது.


Kanchi seer asks Brahmins to work unitedly

JAGADGURU'S 7 SUGGESTIONS TO COMMUNITY

1 Don't outsource practices

2 Strive to remain in India

3 Consider gated communities

4 Counter negative portrayal

5 Maintain village ties

6 Uphold standards

7 Greater presence in administration

நமக்கான தனி "அக்கிரகாரங்களை" உருவாக்க வேண்டும். 50-100 பிராமணர்கள் மட்டுமே வசிக்கக்கூடிய தனி அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய கலாச்சாரத்தைக் காப்பாற்ற முடியும். இசை, சினிமா மற்றும் கலை நிகழ்ச்சிகள் வழியாக நம்முடைய தர்மத்தைப் பரப்ப வேண்டும். கிராமங்களை நம்முடைய 'பிராமண' தர்மத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து மக்களை நாம் வழிநடத்த வேண்டும்.


ஒவ்வொரு வீட்டிலும் கோயில்களிலும் நமது குல கோத்திரங்களை நிலைநிறுத்தியாக வேண்டும். நமக்கான "மரபுவழி ஆடைகளை (மடிசார்), (பஞ்ச கச்சம்) கைவிடக்கூடாது" என்று பேசி இருக்கிறார். அரசியல் சட்டத்துக்கு எதிரான இந்த இனவெறிப் பேச்சின் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்த பார்ப்பனியத்திற்கு துணைபோகும் போலித் தமிழ் தேசியவாதிகளை கண்டித்தும் ஏப்ரல் 21, 2025 அன்று தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்த இந்த மாநாடு முடிவு செய்கிறது. கழகத் தலைவர் இந்த தீர்மானத்தை முன்மொழிய கழகத் தோழர்கள் பலத்த கரவொலியுடன் வரவேற்றனர்.

### பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு பாராட்டு

தமிழர்களின் தன்மான மீட்பர் தலைவர் பெரியார் மீது அவதூறுகளை வீசி, தமிழ்நாட்டில் அவரைத் தனிமைப்படுத்தலாம் என்ற சதித்திட்டத்தை முறியடிக்கவும், அந்தத் துரோகக் கும்பலின் முகத்திரையைக் கிழித்தெறிந்து, மக்களிடத்தில் பெரியாரைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடும் திராவிடர் விடுதலைக் கழகம் இந்த பயணத்திற்குத் திட்டமிட்டது. தன்னல மறுப்போடு, பெரியார் லட்சியத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் கழகத் தோழர்கள் ஆர்வத்துடன் இந்த பயணத்தில் பங்கேற்றனர். கொளுத்தும் வெயிலில் தங்களை வருத்திக் கொண்டு நாள் ஒன்றுக்கு குறைந்தது நான்கு கூட்டங்கள் வழியாக பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்தித்துப் பரப்புரை, நூல் விற்பனை, நிதி திரட்டல் என்ற பணிகளை ஏற்று 'பெரியார் பணி செய்வதே என் கடன்' என்ற லட்சிய வெறியோடு ஒரு வாரகாலம் பயணித்த கழகச் செயல் வீரர்களை இம்மாநாடு பாராட்டுகிறது, மகிழ்கிறது. இந்தப் பயணத்தில் தோழர்கள் செலுத்திய உழைப்பு வீண் போகாது; வரலாற்றில் பதியப்படும் என்று இந்த மாநாடு பெருமை அடைகிறது.

# தமிழ்நாடு முதல்வரை இந்தியாவே திரும்பிப் பார்க்கிறது!

"இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சிதான் ஒன்றிய ஆட்சியின் திணிப்புகள், மறுப்புகளுக்கு எதிராகக் கருத்தியல் போராட்டம் நடத்தி வருகிறது. நாடாளுமன்றத்தில் பாஜகவின் மெஜாரிட்டி எண்ணிக்கையைக் குறைத்து மைனாரிட்டி நிலைக்குத் தள்ளியவர்கள் தமிழ்நாட்டு வாக் காளர்கள். அதன் காரணமாக தமிழ்நாட்டு மக்களின் நிதி உரிமைகளைப் பறிப்பதோடு ஆளும் கட்சிக்குக் கடுமையான அரசியல் நெருக்கடிகளையும் ஒன்றிய பாஜக ஆட்சி உருவாக்கி வருகிறது.



1967 முதல் இருமொழிக் கொள்கையை நடை முறைப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு. கல்வி கட்டமைப்பில் இந்தியாவிற்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தோல்வி அடைந்த மும்மொழித் திட்டத்தை தமிழ்நாட்டு மக்கள் மீது மிரட்டித் திணிக்கும் ஒன்றிய ஆட்சிக்குப் பணிய மாட்டோம், நிதி தர மறுத்தாலும் மாநில அரசு அந்த நிதியை ஒதுக்கும். மும்மொழிக் கொள்கை காவிக் கொள்கை, நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். கொள்கை என்று அறிவித்துவிட்டார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

40-க்கும் மேற்பட்ட மாநில மொழிகளை இந்தி அழித்த வரலாற்றை முதலமைச்சர் சுட்டிக் காட்டிய நிலையில் இந்தி பேசும் உ.பி. மாநில சட்டசபையில் இந்தி எதிர்ப்புக் குரல் ஒலிக்கத் தொடங்கி இருப்பது, திராவிட மாடல் ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

தொகுதி மறு சீரமைப்பு வர இருக்கும் சூழலில் பாஜக ஆட்சியில் கடந்த கால கபட செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையோடு அதைத் தடுக்கும் முயற்சியில் தமிழ்நாடு முதல்வர் இறங்கியுள்ளார். பல மாநிலங்களின் முதல்வர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், அவர்களின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளார்கள். இதன் வழியாக இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த முதலமைச்சராக உயர்ந்து நிற்கிறார்.

முதல்வரின் இந்த மாநில உரிமைப் போராட்டங்களைப் பாராட்டி வரவேற்கிறோம். மாநிலத்தின் உரிமைக்கும், சுய மரியாதைக்குமான இந்தப் போராட்டங்களுக்கு அனைத்துத் தரப்புத் தமிழர்களும் துணை நிற்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது." (மயிலாடுதுறை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)

(எஞ்சியுள்ள தீர்மானங்கள் 4வது பக்கதில்)..

## தலையங்கம்

# சங்கராச்சாரிகளை அம்பலப்படுத்துவோம்!

சமூக மாற்றத்திற்கு வாழ்நாள் முழுதும் போராடியவர் பெரியார். சமூகத்தை அடிமைப்படுத்திய சக்திகளை சரியாக அடையாளம் கண்டார். “ஜாதி வர்ணாசிரம” கட்டமைப்பே தமிழர்களின் எதிரி என்ற முடிவுக்கு வந்தார். அதற்கான கருத்தியல்களை வழங்கிய பார்ப்பனியத்தையும், அதன் தலைமை பீடமான சங்கராச்சாரிகளையும் கடுமையாக எதிர்த்தார்.

பெரியார் ஜாதி ஒழிய வேண்டும் என்றார். சங்கராச்சாரிகள் பிறவியின் அடிப்படையில் பிராமண, சூத்திர பேதத்தை நியாயப்படுத்தும் வர்ணாசிரமமே நமக்கான தர்மம் என்றனர். பெரியார் தீண்டாமைக்கு எதிராகக் களமாடினார். வைக்கத்தில் போராடினார். சங்கராச்சாரிகள் தீண்டாமை தேவை அது ஷேமகரமானது என்றார்கள். பெரியார் பெண்ணடிமை ஒழிய வேண்டும் என்றார். சங்கராச்சாரிகள் பெண்கள், ஆண்களுக்கு அடிமைப்படுவதே நமக்கான தர்மம் என்றனர். வேலைக்குப் போகும் பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்கள், கணவனை இழந்த பெண்கள் தரிசு நிலம்.

அவர்கள் பார்க்கக்கூடாதவர்கள், தீண்டப்படாதவர்கள் இதுவே நமது தர்மம் என்றார்கள். பெரியார் தமிழை அறிவியல் மொழியாக்க விரும்பினார். இன்னும் தமிழ் காட்டுமிராண்டி மொழியாகவே இருக்கலாமா என்று கவலைப்பட்டார். திருக்குறள் மாநாடு நடத்தினார். குறள் நெறியே நமது மதம் என்றார். திருக்குறளைக் குறைந்த விலையில் அச்சிட்டு பரப்பினார். தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். ஆனால் சங்கராச்சாரிகள் சமஸ்கிருதமே நமக்கான மொழி என்றார்கள். அதுதான் தெய்வ பாஷை என்றார்கள், தமிழ் நீஷபாஷை, உச்சி வேளை பூஜையின் போது தமிழில் பேச மாட்டோம் என்றார்கள். அப்படிப் பேசினால் மீண்டும் ஸ்நானம் செய்ய வேண்டும் என்றார்கள், கோயில் வழிபாட்டு மொழியாக சமஸ்கிருதம் மட்டுமே இருக்க வேண்டும் என்றார்கள்.

‘தீக்குறளை சென்றோதோம்’ என்று திருப்பாவையில் ஆண்டாள் கூறியுள்ளதை திருக்குறளை படிக்கக்கூடாது என்று திருக்குறளை இழிவுபடுத்தினார்கள். பெரியார் அரசியல் சட்டத்தில் ஜாதிக்குப் பாதுகாப்பு இருக்கக் கூடாது என்றார். அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்ட போது காஞ்சி மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதி அதைக் கடுமையாக எதிர்த்தார். பிராமணர்களின் தர்மங்களும் சாஸ்திரங்களுமே நமக்கான சட்டம், வேறு அரசியல் சட்டமே தேவை இல்லை என்று பகிரங்கமாக எழுதினார். யாகம் உள்ளிட்ட வேத சடங்குகளை எதிர்த்து பார்ப்பனியத்துக்கு எதிராக மக்களைத் திரட்டினார் புத்தர். அந்த புத்த மார்க்கத்தை வீழ்த்தியவர் ஆதிசங்கரர். அதற்காகவே நான்கு திசைகளிலும் சங்கர மடங்களை அவர் நிறுவினார். மீண்டும் வேத காலத்தை உருவாக்க வேண்டும் என்பது சங்கராச்சாரிகளின் லட்சியம் அதைத் தடுத்து நிறுத்த வாழ்நாள் முழுவதும் போராடியவர் பெரியார்.

வேதகாலத்தை மீண்டும் கட்டமைக்க இப்போது என்ன தேவைப்படுகிறது, இந்தியாவை அழித்து இந்துராஷ்டிரம் உருவாக்க வேண்டும், அதற்கு மாநில உரிமைகள், மொழி உரிமைகள் பல்வேறு தேசிய இனங்களின் அடையாளங்கள் தடையாக நிற்கின்றன; எனவே ஒற்றை ஆட்சியை நோக்கி பல்வேறு தேசிய இனங்களின் உரிமைகளை அழிக்கும் முயற்சியில் ஒன்றிய ஆட்சித் துடிக்கிறது.

ஒரு சில வட மாநிலங்களில் மட்டும் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து இந்தி பேசாத மாநிலங்கள் உட்பட பிற மாநிலங்களைத் தங்களுக்கு அடிமை ஆக்கிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்தோடு தொகுதி மறு சீரமைப்பைப் பயன்படுத்த திட்டமிட்டு வருகிறார்கள்.

மக்கள் பேசாத சமஸ்கிருதத்திற்கு ஏனைய மொழிகளை விட பல மடங்கு கூடுதலாக நிதி ஒதுக்குகிறார்கள். தேசியக் கல்விக் கொள்கையில் சமஸ்கிருதமே நமது பண்பாடு என்று அறிவிக்கிறார்கள். அந்தப் பண்பாட்டைத் திணிப்பதற்கு வழி அமைத்துத் தருவதற்கு மும்மொழி திட்டத்தைத் திணிக்கிறார்கள். சூத்திரனுக்கு கல்வியைத் தராதே என்ற மனுதர்ம கொள்கைக்கு வலிமை சேர்க்க தமிழ்நாட்டின் கல்வி நிதியை முடக்குகிறார்கள். திட்டமிட்டு குலத் தொழிலுக்கு உயிரூட்ட விஸ்வகர்மா திட்டம் வருகிறது. மக்கள் ஜனநாயகத்திற்கும் அதை மறுக்கும் வேத பார்ப்பனியத்துக்கும் நடக்கும் போராட்டம்தான் இப்போது நடக்கும் அரசியல். பெரியார் – சங்கராச்சாரி போராட்டம் தொடர்கிறது.

தமிழ்நாட்டில் பெரியார் ஆழமாக விதைத்துச் சென்ற சிந்தனைகளை சீர்குலைத்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆளுநர் பெரியாரை எதிர்த்துப் பேசுகிறார். ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்திலேயே பெரியாரை எதிர்க்கிறார். அயோத்தி ராமன் கோயிலில் ராமன் சிலையை நிறுவ சூத்திரன் மோடிக்கு உரிமை இல்லை என்று சங்கராச்சாரிகள் வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். நிர்மலாக்கள் அந்த சங்கராச்சாரிகளைக் கண்டிக்கவில்லை மாறாக சங்கராச்சாரிகளை எதிர்த்துக் களமாடிய பெரியாரை இழிவு படுத்துகிறார். இதற்கு சில போலி தமிழ் தேசியவாதிகளும் தமிழனுக்கு துரோகம் இழைத்து பார்ப்பனியத்திற்கு விலை போகிறார்கள்.

இன்றைக்கு பெரியார் எதிர்ப்பு என்பது சங்கராச்சாரிகளின் பார்ப்பனிய நச்சுக் கருத்துகளுக்கு உயிரூட்டும் முயற்சியே ஆகும். பார்ப்பனிய சூழ்ச்சிகளை முறியடிக்கத் தயாராவோம்!

# தரிசனத்துக்கு சட்டையை கழற்ற மறுப்பு! கேரளாவில் போராட்டம்

*திருவிதாங்கூர் தேவசம் போர்டின் அறிவிப்பை மீறி பத்தனம்திட்டா அருகே சம்பவம்!*

*கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்திலுள்ள தர்மசாஸ்தா கோயிலில் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் அறிவிப்பை மீறி சட்டை அணிந்து தரிசனம் செய்த பக்தர்களால் பரபரப்பு ஏற்பட்டது.*

*கேரளாவில் குருவாயூர் கிருஷ்ணன் கோயில், திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயில் உள்பட பல முக்கிய கோயில்களில் ஆண்கள் சட்டை அணிந்து செல்லக்கூடாது என்ற மரபு கடந்த பல வருடங்களாக பின்பற்றப்பட்டு வருகிறது.*

*இந்நிலையில் சமீபத்தில் திருவனந்தபுரம் அருகே உள்ள சிவகிரி நாராயண குரு ஆசிரமத்தில் கேரள முதல்வர் பினராய் விஜயன் தலைமையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஆசிரமத்தின் தலைவர் பேசும் போது கோயில்களில் ஆண்கள் சட்டை அணிந்து செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.*

*சிவகிரி மடத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் இந்த வழக்கம் பின்பற்றப்பட மாட்டாது என்று அவர் மேலும் கூறினார். காலம் மாறும் போது இது போன்ற நம்பிக்கைகள் தேவையில்லாதது என்று முதல்வர் பினராயி விஜயனும் அப்போது தெரிவித்தார்.*

*பத்தனம்திட்டா மாவட்டம் ரான்னி பெருநாடு பகுதியில் கக்காட்டு தர்ம சாஸ்தா கோயில் உள்ளது. திருவிதாங்கூர் தேவசம் போர்டின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தக் கோயிலில் ஆண்கள் சட்டை அணிந்து தரிசனம் செய்ய அனுமதி கிடையாது.*

*இந்நிலையில் இந்தக் கோயிலில் எஸ்.என்.டி.பி. என்ற அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் சட்டை அணிந்து தரிசனம் செய்தனர். இதை முன்னிட்டு கோயில் அருகே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மூடநம்பிக்கைகளை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தக் கோயிலில் சட்டை அணிந்து தரிசனம் செய்ததாக இந்த அமைப்பை சேர்ந்த நிர்வாகிகள் கூறினர்.*

*இதுகுறித்து கக்காட்டு தர்மசாஸ்தா கோயில் நிர்வாகி அருண் கூறியபோது, “சபரிமலை ஐயப்பன் கோயிலைப் போலவே இது புராதனமான ஒரு கோயில் ஆகும். இந்தக் கோயிலில் சட்டை அணிந்து செல்லக் கூடாது என்பது ஒரு மரபாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கோயிலில் ஆங்காங்கே அறிவிப்பு பலகை வைத்துள்ளோம். ஆனால் இதைப் பின்பற்ற வேண்டும் என்பது பக்தர்களுக்கு கட்டாயம் அல்ல” என்றார். கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் முதுகில் பூணூல் அணிந்தவர்களா இல்லை என்று கண்டறிவதற்கே சட்டை இல்லாமல் கோயிலுக்குள் செல்லும் மரபு உருவாக்கப்பட்டது.*

# மும்மொழிக் கொள்கை சீரழிவு!

*புதிய கல்விக்கொள்கையை இந்தியாவிலேயே முதன்முதலில் நடைமுறைப்படுத்திய மாநிலம் கர்நாடகா. 2021-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த பசவராஜ் பொம்மை தலைமையிலான பா.ஜ.க. அரசு, புதிய கல்விக்கொள்கையை அம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தியது. 2023-ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசு மீண்டும் அமைந்தவுடன், இந்தப் புதிய கல்விக்கொள்கையைத் திரும்பப் பெறுவது குறித்தும், மாநிலக் கல்விக் கொள்கையை வரையறுப்பது தொடர்பாகவும் 15 பேர் கொண்ட குழுவை அமைத்தது. அந்தக் குழு இதுவரை தங்களது வரைவறிக்கையைச் சமர்பிக்கவில்லை.*

*இதனால், புதிய கல்விக்கொள்கை இன்னும் அம்மாநிலத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன்படி மும்மொழிக் கொள்கையும் கடைபிடிக்கப்படுகிறது. மூன்றாவது மொழியாக எந்த இந்திய மொழியை வேண்டுமானாலும் படிக்கலாம் என்று, தமிழ்நாட்டில் பா.ஜ.க. சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், கர்நாடகாவில் மூன்றாவது மொழியாக இந்திதான் கற்பிக்கப்படுகிறது. 6, 7-ஆம் வகுப்புகளில் இந்தி கற்றுக்கொடுக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோதும் முழுமையாக இந்தி ஆசிரியர்களை நியமிக்கவில்லை.*

*இப்படி, கற்றல் குறைபாட்டோடும், அதனால் ஏற்படும் மனச்சுமையோடும் இருக்கும் மாணவர்களுக்குப் பத்தாம் வகுப்பில் கட்டாயப்பாடமாக இந்தி வைக்கப்பட்டுள்ளது. 2024-ஆம் ஆண்டில் மட்டும் 90,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்திப் பாடத்தில் தோல்வி அடைந்துள்ளனர். எந்த வகையிலும் பயன்படாத ஒரு மொழியைக் கட்டாயமாக ஏன் கற்க வேண்டும், மாணவர்களை ஏன் இவ்வளவு நெருக்கடிக்குள்ளாக்க வேண்டும் என்று கர்நாடக மாநிலக் கல்வியாளர்கள் விமர்சனங்களை வைக்கத் தொடங்கியுள்ளனர். கல்வியில் இருந்து மாணவர்களை விலக்கும் இந்தித் திணிப்பை நீக்க வேண்டுமென்று குழந்தைகள் உரிமை அமைப்புகள் பரப்புரையைத் தொடங்கியுள்ளன.*

*ஆபத்து வந்த பிறகு விழி பிதுங்கி நிற்கிறது, கர்நாடகா; வருமுன் காப்போம் என விழிப்போடு எதிர்க்கிறது, தமிழ்நாடு!*

# எளிதில் கிடைக்கும் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பு!

*தமிழ்நாட்டில் சுமார் 10 ஆண்டுகளாக, பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாட்டில் MS / PhD போன்ற மேற்படிப்பு படிப்பதற்கு என்று உதவித்தொகை திட்டம் நடைமுறையில் இருக்கிறது. 2021-ஆம் ஆண்டுவரை இந்த திட்டத்தினால் பயன்பெற்றவர்கள் மொத்தம் 10 பேர்கூட கிடையாது. ஆனால், 2021ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு இப்போது வரை மட்டும் சுமார் 135 பேர் இந்த திட்டத்தினால் பயன்பெற்று வெளிநாட்டில் படிக்கிறார்கள்.*

*பல மாணவர்கள் வருடத்திற்கு 30 லட்சம் ரூபாய் வரை இத்திட்டத்தில் நிதியுதவி பெறுகிறார்கள். கடந்த நிதி ஆண்டில் மட்டும் தமிழ்நாடு அரசு சுமார் 30 கோடி ரூபாய் இதற்காக செலவு செய்திருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.*

# மாநாட்டுக் காட்சிகள்


திராவிடர் விடுதலைக் கழகம்
பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?
பரப்புரைப் பயணம் நிறைவு
மாநாடு
மார்ச் 22


திராவிடர் விடுதலைக் கழகம்
பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?
பரப்புரைப் பயணம் நிறைவு
மாநாடு
மார்ச் 22















திராவிடர் விடுதலைக் கழகம்
பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?
பரப்புரைப் பயணம் நிறைவு
மாநாடு


திராவிடர் விடுதலைக் கழகம்
பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?
பரப்புரைப் பயணம் நிறைவு
மாநாடு
மார்ச் 22
தலைமை
தோழர். கொளத்தூர் மணி
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.








பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?
பரப்புரைப் பயணம் நிறைவு
மார்ச் 22





















date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மாநாட்டிலிருந்து சில துளிகள்

- பயணக் குழுவினர் மயிலாடுதுறை கேணிக்கறையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பேரணியாக முழக்கங்களுடன் மாநாட்டு மேடைக்கு அணிவகுத்து வந்தனர்.
- கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனின் திராவிட மாடலா? ஆரிய மாடலா? நூலை (தலையங்கத் தொகுப்பு) கள்ளக்குறிச்சி பயணக்குழு பொறுப்பாளர் இராமர் வெளியிட பயணக்குழுவில் தொடர்ந்து வந்த சென்னை இரண்யா, சேலம் ஆனந்தி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.
- ரூபாய் 500 மதிப்புள்ள நூல் 400-க்கு விற்கப்பட்டது. அனைத்து பிரதிகளும் மாநாட்டில் விற்றுத் தீர்ந்தன.
- மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் கழக வளர்ச்சிக்கு ரூ.25,000 கழகப் பொருளார் சு.துரைசாமி அவர்களிடம் வழங்கப்பட்டது.
- மேடை அருகே அமைக்கப்பட்ட தனித்திரையில் பெரியார் பற்றிய குறும்படம் ஒளிப்பரப்பட்டது. குறும்படம் தோழர்கள் இடையே உணர்வலைகளை உருவாக்கியது. .பிரகாஷ் எழுத்தில் கொளத்தூர் கபிலன் ஸ்டுடியோ இந்த குறும்படத்தை உருவாக்கியது.
- பயணக் குழுவை வழிநடத்திய இரா.உமாபதி, காவை ஈசுவரன், கள்ளக்குறிச்சி இராமர், கோவை நிர்மல் பயண அனுபவங்களையும், மக்கள் தந்த ஆதரவுகளையும் விளக்கிப் பேசினர்.
- பெரியார் எந்த நோக்கத்திற்காக தனித்தமிழ்நாடு கேட்டாரோ அந்த நோக்கமும் காரணங்களுமே இப்போது அரசியல் போராட்டமாக நடக்கிறது என்று குறிப்பிட்ட பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பயணத்தில் பங்கேற்ற தோழர்களை பாராட்டும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.
- நிறைவுரை ஆற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி தீர்மானங்களை முன்மொழிந்தார் பெரியார் மீது கை வைத்தால் பார்ப்பனக் கருத்தியலின் வடிவமான சங்கராச்சாரிகளின் முகத்திரை கிழிக்கப்படும் என்று பலத்த கரவொலிகளுக்கிடையே அறிவித்தார்.
- கோவன் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் சனாதன எதிர்ப்புக் கருத்துக்களை கூர்மையாகப் பார்வையாளர்களிடம் கொண்டு சென்று உணர்வலைகளை உருவாக்கியது.
- பயணக் குழுவினருக்கு மயிலாடுதுறை மாவட்ட கழகத் தோழர்கள் கழகத்தின் புதிய வெளியீடுகளை பரிசுகளாக வழங்கினர்.
- மாநாட்டில் போராசிரியர் செயராமன், கோபி இளங்கோவன், ஆசிரியர் சிவகாமி, புதுவை தீனா, ராஜ்குமார் (காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்), கல்யாணம் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்), நிவேதா முருகன்(பூம்பூகார் சட்டமன்ற உறுப்பினர்), மோகன் குமார் (விசிக மாவட்டச் செயலாளர்), உரையாற்ற நடராசன்(மயிலாடுதுறை நகரச் செயலாளர்) நன்றியுரையாற்றினார்.
- பெரும் எண்ணிக்கையில் தோழர்கள் திரண்டனர் கருஞ்சட்டை கடலாக காட்சி அளித்தது மயிலாடுதுறை.
- இந்த மாநாட்டு ஏற்பாடுகளை மகேஷ் (மாவட்டச் செயலாளர்) ஒருங்கிணைப்பில் கழகத் தோழர்கள் மகாலிங்கம் (மாவட்ட தலைவர்), தில்லை நாதன், நடராசன்(நகர செயலாளர்), கு.செந்தில் குமார் (மாவட்ட அமைப்பாளர்), சூ ஆரோக்கியதாஸ், பீமராவ், இரா.விக்னேஷ், கே.ரமேஷ், நாஞ்சில் சங்கர்(நகர தலைவர்), மகேஷ் மாவட்டச் செயலாளர், இளையராஜா (தலைமைக் குழு உறுப்பினர்), விஜயராகவன் (மாவட்ட பொருளாளர்), காவியன், கார்த்திக், மதன் குமார் (கடலூர் மாவட்ட அமைப்பாளர்), பிரகாஷ் சிதம்பரம், மகிழ்நன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்தனர். தோழர்கள் அனைவரும் மாநாட்டு ஏற்பாடுகளை பாராட்டி மகிழ்ந்தனர்.

**-நமது செய்தியாளர்**

# தொலைக்காட்சிகளில் ஜாதி வரன் தேடும் விளம்பரங்களை தடை செய்க

“தமிழ்நாட்டு கிராமங்களில் ஜாதிய பாகு பாடுகள் தீவிரமாக பின்பற்றப்படுகின்றன. திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் நிலவும் தீண்டாமை வடிவங்களை நேரில் சென்று ஆய்வு செய்து, அந்த அறிக்கையை தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்திடம் நேரில் வழங்கினர்.

தலித் மக்கள் வாழும் பகுதிகளில் ரேஷன் கடைகள் நடத்தத்தடை, முடிவெட்ட மறுப்பு, இரட்டை தம்ளர் முறை, இருசக்கர வாகனங்களில் செல்லத் தடை போன்ற பல்வேறு வடிவங்களில் தீண்டாமை பின்பற்றப்பட்டு வருகிறது.

அண்மைக்காலமாக உயர்நீதிமன்றங்கள் ஜாதிக்கு எதிராக தீர்ப்புகளை வழங்கி வருவது பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். ஜாதி அடிப்படையில் கோவில்களுக்கு உரிமை கோர முடியாது. கோயில் திருவிழா விளம்பரங்களில் ஜாதிப் பெயர் போடக்கூடாது. ஜாதியை நிலை நிறுத்தும் போக்கு, செயல்பாடுகள் அரசியல் சட்டத்திற்கு எதிரானதாகும் என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் தொலைக்காட்சிகளில் ஜாதி வரன் தேடும் விளம்பரங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்பும் நாடகத் தொடர்கள், நிகழ்ச்சிகள், செய்திகளில் ஜாதி அடையாளம் இடம்பெறுவது இல்லை. ஜாதி கலவர செய்திகளை ஒளிபரப்பும் போது கூட இரு பிரிவினருக்குமிடையே என்று கூறி ஜாதிப் பெயரை குறிப்பிடுவதைத் தவிர்க்கின்றனர். ஆனால் வரன் தேடும் விளம்பரங்களில் வெளிப் படையாகவே ஜாதி அடையாளம் பேசப்படுகிறது, இது தடை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொலைக்காட்சி நிறுவனங்கள் இத்தகைய விளம்பரங்களை செய்தி ஒழுங்கு கருதி வெளியிடாமல் தவிர்க்க வேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்கிறது.

வன்கொடுமைகள் ஜாதியின் பெயரால் நடக்கும் போது காவல்துறை தலையிட்டு நடவடிக்கை எடுக்கிறது, ஆனாலும் தீண்டாமை அடிப்படையில் சிவில் உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்கிறது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் வாக்கு வங்கி கருதி இதற்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ துணை போகிறார்கள். தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் சமூக நல்லிணக்கம் பேணும் கிராமத்திற்கு ஒரு கோடி பரிசு வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். அதுபோலவே தீண்டாமையைப் பின்பற்றும் கிராமங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறது.

இந்த தீண்டாமை அவலங்களை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் தமிழ்நாடு அரசு முழு வீச்சோடு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டு மக்களும் காலத்திற்கு ஒவ்வாத பாகுபாடுகளை நிலைநிறுத்தும் இந்த ஜாதி அடையாளத்தை கைவிட்டு சமூக மனிதர்களாக வாழ முன்வர வேண்டும் என்றும் மாநாடு கேட்டுக்கொள்கிறது.”

## இந்துசமய அறநிலையத்துறைக்கு கண்டனம்

“இந்துக் கோயில்களை நிர்வகிப்பதற்கு மட்டுமே உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை அண்மைக்காலமாக மக்களிடம் இந்து மதப் பரப்புரை செய்யும் துறையாகவே மாறிவருகிறது. பழனியில் உலக முருகன் மாநாட்டைநடத்தியது. இப்போது மகா சிவராத்திரியை அறநிலையத்துறையின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு முதன்முறையாக தமிழ்நாடு முழுவதும் கொண்டாடியதாக இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் சேகர்பாபு பெருமைப் படுகிறார். சிவராத்திரி போல் தீபாவளி, கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி விழாக்களையும் அடுத்தடுத்து கொண்டாட அறநிலையத்துறை திட்டமிட்டு உள்ளதா? என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறோம். மத உணர்வுகளை மக்களிடம் வளர்த்து விடும் அறநிலையத்துறையின் இந்தச் செயல்பாடுகள் மதவாத சக்திகள் வேர்ப் பிடிப்பதற்கு மட்டுமே பயன்படும் என்று சுட்டிக் காட்டுகிறோம். அறநிலையத் துறையின் எல்லை மீறும் செயல்களுக்கு, இந்த மாநாடு கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

## அர்ச்சகர் நியமனத்தை விரைவுப்படுத்துக

அதேபோல் அனைத்து ஜாதியினரும் அர்ச்சராகும் திட்டத்தை 24 பேருடன் அறநிலையத் துறை நிறுத்திக் கொண்டுவிட்டது. அர்ச்சகர் பதவிக்காகப் பயிற்சி பெற்றவர்கள் நீண்ட காலமாக காத்திருக்கி றார்கள். நீதி மன்றத்தில் உள்ள தடைகளை அகற்ற எந்த முயற்சியும் அறநிலைத்துறை எடுக்காமல் தாமதப்படுத்தி வருகிறது எனவே நீதிமன்றத் தடைகளை நீக்கி அனைத்து சாதிகளும் அர்ச்சகராகும் திட்டத்தை அடுத்தடுத்த கோயில்களில் விரிவுபடுத்த வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.”

## பெரியார் மீது அவதூறு பரப்புவோர் மீது சட்ட நடிவடிக்கை

“ஆன்மீக சொற்பொழிவு என்ற பெயரில் பார்ப்பன சொற்பொழிவாளர்களும், பிராமணர் மாநாடு போன்ற மாநாடுகளில் உரையாற்றுபவரும் முன்வைக்கும் பல வாதங்கள் அரசியல் சட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ள சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றுக்கு எதிராகவும் வன்கொடுமைத் தடுப்புச் சட்ட குற்ற வரையறைக்குள் வருவதாகவும் உள்ளன.

a) அவ்வாறான உரைகள் ஆற்றப்படும் இடங்களிலேயே எதிர்ப்பினை பதிவு செய்ய வேண்டுமாறு தோழர்களை, தமிழ்நாட்டு பார்ப்பனர் அல்லாத மக்களை, குறிப்பாக இளைஞர்களை இம்மாநாடு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

b) தனி இடங்களில் அவ்வாறு பேசப்பட் டாலும் காணொலி வழியாக பொதுவெளியில் பரப்பப்படும் போது உரிய நிறுவனங்களுக்கு புகார் ( report) இடுமாறும், அதேவேளை காவல் நிலையங்களில் புகார் அளித்து உரிய ஒப்புகையைப் பெறுமாறும் இம்மாநாடு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

c) பெரியார் மீதான ஆதாரமற்ற அவதூறு களை பரப்பியதற்காக புதிய தண்டனை சட்ட விதிகள் 192, 196, 352, 353 ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க சீமான், அண்ணாமலை, எச். ராஜா போன்ற பேர்வழிகள் மீது புகார் கொடுத்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

புகார் அளித்த தோழர்கள் சீமானையும் உரிய காவல்துறை அதிகாரிகளையும் எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டு தனி வழக்குகளாக (Private complaint) உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறு மாநாடு கேட்டுக்கொள்கிறது.”

Tamil" Weekly
Posted" at" :" Pathrika" Channel." Egmore" RMS" Under" WPP Posted":"March"48."4247

owner" and" publisher" by" :" " k0' rajendran." " " from" 49." Journalists" colony." thiruvalluvar" nagar." thiruvanmiyur." chennai" -" 822" 2430' " "
and" printed" by" :" S0' Theesmas." at" " lilly" soosai" offset." " new" no08." " old" No034/3" " mohammed" usain" lane." " royapettah." " chennai" -" 822" 2340'
editor" ;" k0' rajendran